# செய்தி குறிப்பு

புதுவை பிரதேசத்தை தாக்கிய தானே புயலின் காரணமாக சிதைவுற்ற மின் கட்டமைப்பை சீர்செய்யும் பணிகளை மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.T.தியாகராஜன் 01-02-2012 அன்று ஆய்வு செய்தார். இக்கூட்டத்தில் புதுவை மின்திறள் குழுமத் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான திரு.P.R.சிவா, மின்துறை செயலர் மற்றும் மின்துறையின் மூத்த அதிகாரிகள் பங்கேற்றனர்.

30-12-2011 அன்று தானே புயல் புதுவைக்கும் கடலூருக்கும் இடையே கரையை கடந்தது. இப்புயல் சீற்றம் புதுவை பிராந்தியத்தில் உள்ள மின்கட்டமைப்பிற்கு பெரும் அளவில் சேதம் ஏற்படுத்தியது. இதனால் புதுவை பகுதி முழுவதும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது, ஆயிரகணக்கான மின்கம்பங்கள் அடியோடு சாய்க்கப்பட்டன. நூற்றுக்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் பலத்த காற்றினால் நிலத்தில் சாய்ந்து பழுதாகிவிட்டன. மேலும் 230KV அதிஉயர் அழுத்த மின் கோபுரங்கள் மற்றும் அதிஉயர் அழுத்த மின் தடகம்பிகள், துனணமின்நிலைய உபகரணங்கள் ஆகியவையும் அதிக அளவில் சேதம் அடைந்தன. கடற்கரைக்கு மிகவும் அருகில் அமைந்துள்ள புதுச்சேரி மின்துறை தலைமையகத்தில் சூறாவளியின் போது பல ஜன்னல்கள் உடைந்ததால் அலுவலகத்தில் உள்ள கணினிகள் மற்றும் அலுவலக கோப்புகள் சேதம் அடைந்தன.

மின்கட்டமைப்பு மறுசீரமைப்பு பணிகள் மின்துறையால் துரிதமாக செயல்படுத்தப்பட்டு, இருப்பில் இருந்த அனைத்து உபகரணங்களும் மற்றும் மின் பணியாளர்களை கொண்டு போர்க்கால அடிப்படையில் வேலைகள் நடைபெற்று வில்லியனூர் துனை மின்நிலையத்திற்கும் (230/110KV) மரப்பாலம் துனண மின்நிலையத்திற்கும் மின்இனணப்பு 30-12-2011 அன்று மாலையே சீர்செய்யப்பட்டது. அன்று இரவு 09.30 மணியளவில் புதுவை நகர பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டது.

முதலில் உயர் அழுத்த மின்தடங்கள், குடிநீர் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கான மின் இணைப்பு மற்றும் வீட்டு உபயோகத்திற்கும் ேசதமைந்த பகுதிகளை தவிர்த்து மற்ற பகுதிகளுக்கு படிப்படியாக மின்சாரம் வழங்கப்பட்டது. பொங்கல் பண்டிகைக்கு முன்னர் 95 சதவீத மின்நுகர்வோர்க்கு மின்சாரம் வழங்கப்பட்டுவிட்டது. அனைத்து வீடு, வர்த்தகம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு 23-01-2012-க்குள் மின்இணைப்பு வழங்கப்பட்டது. விவசாய மின் இனணப்புகள் மற்றும் தெரு

விளக்குகளுக்கு உண்டான கட்டமைப்புகளும் படிப்படியாக சீரமைக்கப்பட்டு வருகின்றன. புதுவை பிராந்தியத்தில் உள்ள அனைத்து 230/110KV மற்றும் 110/22KV துனை மின்நிலையங்கள் சீர் அமைக்கப்பட்டுவிட்டது. மொத்தம் உள்ள 1739 மின்மாற்றிகளில் 1560 மின்மாற்றிகள் பழுது நீக்கப்பட்டு உபயோகத்திற்கு கொண்டுவரப்பட்டது. மீதம் உள்ள பழுதடைந்த மின்மாற்றி பகுதிகளுக்கு புதிய மின்மாற்றிகள் அமைக்கும் வரை அருகில் உள்ள மின்மாற்றி மூலம் மின்சாரம் தற்காலிகமாக வழங்கப்பட்டு வருகிறது.

மறுசீரமைப்பு பணிகள் எவ்வித பாதிப்பிற்கு உள்ளாகாத வகையில் அதற்கு தேவையான உபகரணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. காரைக்கால் மற்றும் ஏனாம் பகுதியிலிருந்து மின் கம்பங்கள் வரவழைக்கப்பட்டன. மேலும் தேவையான மின்கம்பங்கள் தாராபுரம், கோபிசெட்டிபாளையம், கோவில்பட்டி, கன்னியாகுமரி மற்றும் கயத்தார் போன்ற இடங்களில் இருந்து வாங்குவதற்குண்டான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்பட்டது.

01-02-2012 நிலவரப்படி, 5142 விவசாய மின் இணைப்புக்கள் பாதிக்கப்பட்டதாகவும், அதில் 2447 இணைப்புகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுவிட்டதாகவும் அதிகாரிகள் அமைச்சர் அவர்களிடம் எடுத்துக்கூறினர். அனைத்து விவாசய மின் இணைப்புக்களுக்கும் மின்வசதி தர 2000 மின்கம்பங்கள் மற்றும் 73 மின்மாற்றிகள் நடப்படவேண்டும் என்றும், அதற்கான மின்சாதனங்கள் வாங்கப்படுவதாகவு, இன்னும் 10 நாட்களில் பணிகள் அனைத்தும் முடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதுவை பகுதியில் சேதமடைந்த மின் கட்டமைப்பிற்கு ரூபாய் 49.25 கோடி இழப்பு என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதுபற்றிய மதிப்பீடு மற்றும் விவர அறிக்கை மத்திய அரசு அனுப்பிய உயர் மட்ட குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் மின்சாரம் வழங்குவதில் தவிர்க்க முடியாத காலத்தாமதம் ஏற்பட்டு இருந்தாலும், சூறாவளிக்கு பின்னர் விரைந்து செயல்பட்டு மின்சாரம் வழங்க மின்துறை எடுத்த முயற்சிகளை பொது மக்கள் வரவேற்று பாராட்டும் தெரிவித்து உள்ளனர். மேலும் சூறாவளியின் போது மின்துறை அதிகாரிகள் எடுத்த துரிதமுடிவால் மின்சாரம் 29-12-2011 அன்று நள்ளிரவு நிறுத்தப்பட்டது. இதனால் சூறாவளி கரையை கடக்கும் வேளையில் எந்த வித மின் விபத்தும் நிகழாமல் தவிர்க்கப்பட்டது என்பது குறிப்பிடதக்கது.

## PRESS RELEASE

The progress of the restoration works of the electrical infrastructure in the Puducherry Region, in the aftermath of the cyclone "Thane", was reviewed by the Minister for Power, Thru. T. Thyagrajan on 01.02.2012. The meeting was attended by the Secretary to Government (Power) and senior officials of the Department. Thiru.P.R.Siva, M.L.A& Chairman of Puducherry Power Corporation was also present.

The severe cyclonic storm that crossed the shore near Puducherry and Cuddalore on the early hours of 30.12.2011 had caused extensive damage to electrical installations in Puducherry. Several hundreds of electrical poles were up rooted and more than a hundred distribution transformers were thrown to the ground. Damages were also reported to the 230 KV transmission towers and EHT lines and other sub-station equipments. The Department's headquarters in Puducherry, located very close to the sea shore, was also damaged during the cyclone, several window panes were smashed, computers and records were damaged.

The restoration works were taken up by the Department from the evening of the same day. The limited work force and all the materials available in hand were diverted to attend to the restoration works. Against all odds, the Department was able to restore supply to the 230 KV Villianur Auto Sub-station and 110/22-11 KV Marapalam Sub-station and extend power supply to the core of Puducherry town on the same night by 9.30 P.M .

Initially restoration works were taken up for HT Water Tanks, Public Utilities and domestic connections. By the time of Pongal almost 95% of the connections were restored. By 23rd of January 2012, power supply has been fully restored to all the Domestic, Commercial and EHT/HT industrial Consumers. Thereafter, restoration of power supply to Agriculture service connections and maintenance of streetlights have been taken up and are in progress. All the EHT lines except the 230 KV Ramanathapuram – Villianur line have been put into service. All the 230/110 KV sub-stations and 110/22 KV substations have also been put into service. Out of 1739 transformers, 1560 transformers have been put into service. The remaining areas have been either back fed from adjacent transformers or through other alternate available sources, as a temporary measure, till such time new lines are erected and new transformers are installed.

It has been ensured that sufficient materials are available for the restoration works and that no work is held up for want of materials. Apart from arranging to transport electrical poles from the Department's stock in Karaikal and Yanam, the Department also took immediate steps to purchase poles from places like Tharapuram, Gopichettipalayam, Kovilpatti, Kanyakumari, and Kayathar.

The officials informed that out of the 5142 Agriculture services, around 2447 service connections that were partially damaged have been restored. It was informed that 2000 poles and 73 transformer structures have to be erected to restore the remaining agricultural services. The required quantity of materials are being procured. The Minster urged the officials to complete all the works within the next ten days.

The loss to electrical infrastructure in Puducherry region has been estimated at Rs. 49.25 Crores. A detail estimate to this effect was given to the Inter-Ministerial Team that was sent by the Central Government to assess the damages caused by the cyclone.

Even though in some areas people expressed their impatience in waiting for the restoration of power supply, there has been general understanding and appreciation of the efforts taken by the Department to restore power supply in the aftermath of the cyclone. The timely action taken by the Department to switch off power supply around midnight of 29.12.2011 had also ensured that no electrical accidents took place at the time of the cyclone crossing the coast.